[27th September 1956

Mannans of Malabar

* 250 *Q.*—Sri E. T. KUNHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the class to which the Mannans of Malabar belong; and

(*b*) whether they are allowed any educational concessions in schools?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Mannans of Malabar district belong to Washerman Caste which is a Backward class;

(*b*) Yes, Sir.

Sri M. PALANIYANDI : சலவைக்காரர்களை எல்லாம் தாழ்த்தப் பட்டவர்கள் என்று கருதி எல்லாவிதமான சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் யோசனை செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுது அவ்வாறுதான் செய்யப்பட்டுவருகிறது.

Sri S. RAMALINGAM : சலவைத் தொழிலாளர்களுக்குப் பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கும் கல்விச் சலுகை தான் அளிக்கப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம், கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் மோசமாக இருப்பதனால் அவர்களை ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் போலவே கருதி எல்லாவிதமான சலுகையும் கொடுக்க சர்க்கார் யோசிப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : பிற்பட்ட வகுப்புக் கமிஷனின் யாதாஸ்தைப் பரிசீலனை செய்யும்போது இவ்விஷயமும் கவனிக்கப்படும்.

Sri E. T. KUNHAN : സർ, മണ്ണാന്മാരേയും പിന്നോക്ക സമുദായങ്ങളുടെ പട്ടികയിൽ ഉൾപ്പെടുത്തിയിട്ടുണ്ടെന്നു ബഹു: മന്ത്രി പറഞ്ഞു. എന്നാൽ പൊന്നാനി എ. വി. ഹൈസ്കൂളിൽ പഠിക്കുന്ന എ. നാരായണൻ എന്ന മണ്ണാർ സമുദായത്തിൽ പെട്ട ഒരു വിദ്യാർത്ഥിയിൽനിന്നു നാലും അഞ്ചും ഫോറങ്ങളിൽ ഫീസു വസൂലാക്കുക കണ്ടായി, ഇന്നും വസൂലാക്കിക്കൊണ്ടിരിക്കുകയും ചെയ്യുന്നു. ഇതിനെപ്പററി അന്വേഷിച്ചു ഫീസ് പിരിക്കുന്നതിനെ തടയാനും പിരിച്ച ഫീസ് തിരിച്ചുകൊടുപ്പിക്കാനും ഗവൺമെണ്ടു തയ്യാറാകുമോ ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The individual case may be brought to the notice of the Government and we shall try to have it rectified.

Mr. SPEAKER : That is a private school.

Sri M. PALANIYANDI : பிற்பட்ட வகுப்புக் கமிஷன் தனது யாதாஸ்தில் ஆயிரக்கணக்கான ஜாதியார்களை பிற்பட்ட வகுப்பில் சேர்க்கும்படி சிபார்சு செய்திருப்பது கவலை அளிப்பதாக இருப்பதால்தான் மாகாண சர்க்கார்களையே இதைப்பற்றி பரிசீலனை செய்யும்படியாக மத்திய சர்க்காரிடமிருந்து தாக்கீது வந்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்குப் பதில் சொல்ல நோட்டீஸ் வேண்டும்.

Sri V. BALAKRISHNAN : சலவைத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஆதரித்து அவர்களை ஷெட்யூல் வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று இச்சர்க்கார் பிற்பட்ட கமிஷனையும் இந்திய சர்க்காரையும் வலியுறுத்தி இருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

27th September 1956]

Sri K. P. GOPALAN : Will the Hon. the Minister be pleased to state whether the Government will give preference to Mannans belonging to the Washerman Caste in regard to employment in Government service?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir, all the concessions which are applicable to Backward classes will be applicable to them.

Sri S. RAMALINGAM : நம் நாட்டிலுள்ள மன்னர்களை ஒழித்து விட்டோம். ஆனால் மலபார் மன்னர்களை ஷெட்யூல் வகுப்பில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை கவனிப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எல்லா மன்னர்களுக்கும் எதிரியாக இருக்கக்கூடியவர்கள் மலபார் மன்னர்களுக்கு சிபார்சு செய்வதை ஆதரிப்பது கஷ்டமாக இருக்கிறது.

Sri A. RATNAM : பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் வன்னியகுல க்ஷத்திரியர்களுக்கும் கொடுக்கப்படும் சலுகைகள் முழுவதுமானது சலவைத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுமா ? 9–10 a.m.

The Hon. Sri C. SUBRAMANIAM : பிற்பட்ட வகுப்பினருக்குள்ள எல்லா சலுகைகளும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டுவருகின்றன.

Progress of lignite investigations at Neyveli

* 251 Q.—Sri V. R. NAGARAJAN (on behalf of Sri K. Aranganathan) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the further results of the experiments conducted in the lignite mines?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A note[a] furnishing the information is placed on the table of the House.

Sri V. R. NAGARAJAN : May I know when the actual production of lignite can be expected?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Certain machinery necessary for the implementation of the project has been ordered and it is expected that the inauguration of the project might perhaps take place in another three or four months.

Sri S. RAMALINGAM : இந்த பைலட் பிராஜக்ட் வேலை செய்து கொண்டிருந்தபொழுது வேலையிலிருந்த அநேக தொழிலாளர்கள் வேலை நிறுத்தப்பட்ட பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் வேலை துவக்கும்போது எற்கனவே அப்படி வேலையிலிருந்து நீக்கப்பட்ட எல்லா தொழிலாளிகளுக்கும் வேலை கொடுக்கப்படும் என்று அரசாங்கம் உத்திரவாதம் அளிக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது இந்த விஷயம் இந்த அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இல்லை. இருந்த போதிலும்கூட, நான் சொல்லுகிறது என்னவென்றால், மீண்டும் இந்தப் பெரிய பிராஜக்ட் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும்பொழுது தகுந்த எத்தகைய தொழிலாளர்கள் வேண்டுமோ, அவர்களை மட்டும்தான் வேலைக்கு வைத்துக்கொள்ளமுடியும்.

Sri M. PALANIYANDI : பதிலிலே கனம் மந்திரி அவர்கள் சில இறைக்கும் இயந்திரங்கள் பழுதாகிவிட்டன என்று சொன்னார்கள். இறைக்கும் இயந்திரங்கள் புதிதாக வரவழைக்கப்பட்டனவா ? அல்லது, பழைய இயந்திரங்களைக்கொண்டே பரீக்ஷார்த்த திட்டம் நடத்தப்பட்டதா ?

[a] Printed as Appendix I on page 446 infra.